Kanyakumari district. In their notices most of them have mentioned that a judicial enquiry is necessary and that therefore they have given notices of adjournment motions . . .

SRI M. KALYANASUNDARAM: Sir, in my notice I have not asked for a judicial enquiry.

MR. SPEAKER: That is why I have stated 'most of them' and not 'all', I have been careful about it.

I withhold consent to all these adjournment motions as the Members can refer to the matter in the discussion on the Governor's Address which will take place to-day and in the subsequent days.

(3) RELIEF TO RYOTS IN CYCLONE-AFFECTED DISTRICTS.

MR. SPEAKER: The hon. Member, Sri M. Kalyanasundaram has also given notice of a motion for adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the failure of the Government to provide for adequate relief to the ryots who have incurred very severe loss to their crops such as paddy, sugarcane and betel vines in the districts of Ramanathapuram, Thanjavur and Madurai due to the heavy cyclone in the month of December 1964.

This matter also can be referred to in the discussion on the Governor's Address which will take place to-day and in the subsequent days and the Hon. Chief Minister also is going to make statements regarding the cyclone in certain districts and the shooting in Nagercoil. Therefore I withhold consent to it. The Hon. Chief Minister is also going to make statements regarding the cyclone in certain districts and the shooting in Nagercoil. Therefore, I withhold consent to it.

IV.—GOVERNMENT MOTIONS.

(1) SUSPENSION OF RULE 41 (3).

MR. SPEAKER: I have to inform the House that Hon. Members are aware that under Rule 41 of the Assembly Rules, only one matter can be raised at the same sitting.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move . . .

SRI M. KALYANASUNDARAM: On a point of order, Sir. According to the notices circulated, three matters are to be taken up to-day under Rule 41. According to our Rules, only one matter can be taken up . . .

MR. SPEAKER: That is why I have already referred to it......

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: That is why I am going to move a motion for that.

19th January 1965] [Sri M. Bhaktavatsalam]

Sir, under Rule 244 of the Assembly Rules I move—

'That sub-rule (3) of Rule 41 of the Madras Legislative Assembly Rules, in so far as it requires that not more than one matter shall be raised under Rule 41 at the same sitting, be suspended'.

கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு பிரேரணையை மட்டும் எடுத்துக்கொள்வதென்றால், மற்ற இரண்டு பிரேரணைகளையும் வேறு நாட்களில் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றே அசெம்பிளி விதி 41-வதின்படி மூன்று பிரேரணைகளும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இன்றைக்கே இந்த அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டால், இதைக் குறிப்பிட்டு கனம் அங்கத்தினர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வசதியாய் இருக்கும் என்று நினைத்துத்தான் நான் இந்த 'மோஷனை'ப் பிரேரேபிக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த மூன்று சம்பவங்களின்மீதும், ஒரே நாளில் அதுவும் ஆரம்ப நாளிலே எல்லாத் தகவல்களையும் இந்த சபைக்குக் கொடுத்து விவாதத்திற்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்திருக்கக்கூடியதை நான் பாராட்டவேண்டியவன். ஆனால், அவ்வாறு பாராட்ட முடியாமல் இருப்பதற்காக வருந்துகிறேன். இதற்காக வேண்டி இது சம்பந்தப்பட்ட விதியை சஸ்பெண்டு செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். இந்த சபை அதை அனுமதித்த பிறகுதான் அவர்கள் இங்கு மூன்று அறிக்கைகளையும் சமர்ப்பிக்கவேண்டும். இந்த மூன்று அறிக்கைகளும் முக்கியமானவைதான். ஆனால், இதிலே ஒரு உள்நோக்கம், அதாவது அரசியல் நோக்கம் இருப்பதால்தான், இதை ஒப்புக்கொள்ள முடியாமல் இருக்கிறது. எதிர்க் கட்சிகள் ஒத்திவைப்புப் பிரேரணைகள் கொடுக்கும் என்று எதிர்பார்த்து அதற்காக அறிக்கைகளை தயார் செய்து அந்த ஒத்தி வைப்புப் பிரேரணைகளை இங்கே விவாதிக்க சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது என்பதற்காக—அறிக்கைகள் தயாரித்திருந்தும்கூட—இவ்வாறு செய்வது சரியல்ல. போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது பற்றி கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடப்படவில்லை.

MR. SPEAKER: The adjournment motion has been disallowed not because the Hon. Chief Minister is going to make a statement. Even otherwise it would have been disallowed. I have got half a dozen reasons for disallowing it and I do not want to take up the time of the House by making a lengthy statement. So, the hon Member should not argue that I have disallowed the adjournment motion because the Hon. Chief Minister is going to make a statement.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த ஒத்திவைப்புப் பிரேரணைகள் தள்ளுபடி செய்யப்பட்டதைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் சொல்லவேண்டியதைச் சொல்கிறார்கள்.

[19th January 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு பயன்படுத்த வேண்டியது ஒன்றுமில்லை. கனம் உறுப்பினர் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியின் உறுப்பினர். நேற்று அந்தக் கமிட்டியின் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு அவர்கள் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்திலே விவாதித்தது, முடிவு செய்யப்பட்டது எல்லாம் அவர்களுக்கும் தெரியும். கனம் உறுப்பினர் அவர்களே, நான் தனியாக இந்த சம்பவங்கள்மீது ஒரு அறிக்கை கொடுக்க வேண்டுமென்றும் கூறினார்கள். கவர்னர் உரையின்மீது விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நான்கு நாட்களில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் குறைத்துவிட்டு தனியாக இந்த அறிக்கைகளின்மீது ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ விவாதிப்பதற்கு அவகாசம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று யோசனை கூறினார்கள். அந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த அறிக்கைகளிலே எல்லாவற்றையும் சமர்ப்பித்துவிட்டால் இந்த அறிக்கைகளைக் குறிப்பிட்டு கனம் உறுப்பினர்கள் பேசலாம், நான்கு நாட்களும் ஒரு பொது விவாதமாக அது இருக்கட்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் விளைவாகத்தான் இந்த மூன்று அறிக்கைகளையும் இந்த சபை முன்பு இங்கே சமர்ப்பிக்கலாம் என்று முற்பட்டேனே தவிர கனம் அங்கத்தினர் நினைப்பதுபோல் அல்லது கற்பனை செய்வது போல் இதிலே அரசியல் நோக்கம் ஒன்றும் கிடையாது. அவசரப் பிரேரணைகள் வந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. கனம் உறுப்பினர்களின் சௌகரியத்திற்காகத்தான் இந்த மூன்று அறிக்கைகளையும் அதிகாரிகளை அவசரப்படுத்தி தயார்செய்து நேற்று இரவு பதினோரு மணிக்கு இந்த அறிக்கைகளையெல்லாம் சரிபார்த்து நான் இப்பொழுது இங்கே சமர்ப்பிக்க இருக்கிறேனே தவிர, இதிலே எங்களுக்கு உள்நோக்கம் வேறு கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: What does the hon. Member, Sri Kalyanasundaram want to say?

SRI M. KALYANASUNDARAM: It is for the House to decide.

MR. SPEAKER: Now a motion for suspending the rule has been moved to facilitate three matters being taken up by the House to-day.

The question is—

'That sub-rule (3) of Rule 41 of the Madras Legislative Assembly Rules, in so far as it requires that not more than one matter shall be raised under Rule 41 at the same sitting, be suspended.'

The motion was put and carried unanimously.